1972 மார்ச் 11]

***** *430.* **வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புதிய முதியோர் பள்ளிகளைத் துவக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 500 முதியோர் கல்வி மையங்கள் துவக்கப்பட்டு நடத்துவதற்கான திட்டம் அரசால் பரிசிலிக்கப்பட்டு தள்ளிவைக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முதியோர் பள்ளிகளை நடத்த முன்வரும் தனிப்பட்டவர்களுக்கும், பொது நல நிறுவனங்களுக்கும் அரசாங்கம் மானியம் வழங்க முன்வருமா ? ஊராட்சி மன்றங்கள்தோறும் கண்டிப்பாக ஒரு முதியோர் பள்ளியாவது கட்டாயமாக நடத்தப்படவேண்டும் என்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு அறிவிப்பு அனுப்பப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது முதியோர் கல்வி 48-49-ல் இருந்து பல்வேறு மாறுதல்களின் அடிப்படையில் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. பார்மேர்ஸ் எட்யுகேஷன் என்று முதியோருக்கு எந்த அறிவு, எப்படிப்பட்ட அறிவு வேண்டுமோ அப்படிப்பட்ட அறிவைமட்டும் கொடுப்பது என்பதில் அதிகக் கவனம் செலுத்துவது பலன் தரும் என்று உழவர்களுக்கு எப்படிப்பட்ட அறிவு தரவேண்டும், எந்த அறிவு தரவேண்டும் என்று அந்த அறிவை எழுத்துமூலம் பெறுவதற்கு, அதைத் தருவதற்குள்ள முயற்சியில் தஞ்சாவூர், பொள்ளாச்சி, திருவண்ணாமலை, தூத்துக்குடி போன்ற பலயிடங்களில் 240 பள்ளிகள் வைத்து ரூ. 2,14,800 செலவில் நடத்தப்பட்டு வருகிறது. ஆங்காங்குள்ள 500 முதியோர் பள்ளிகளில் பத்தாயிரம் பேர்களுக்கு பயிற்சி பெறும் அளவிற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. முதியோர் கல்வியில் பொதுமக்களின் ஒத்துழைப்பு, ஊராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பு அடிப்படையில் முன்வருகிறபோது அரசு அதற்கு உதவி செய்ய முன்வரும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் :. முன்பிருந்த முதியோர் கல்வித் திட்டத்திற்கும் இப்போதுள்ள முதியோர் கல்வித் திட்டத்திற்கும் உள்ள மாறுபாடுகள், வேறுபாடுகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்பெல்லாம் 13-ல் இருந்து 40 வயது வரையில் உள்ளவர்களுக்கு கல்வி புகட்டப்பட்டு வந்தது. 30, 40 வயது என்பதைவிட 8-ல் இருந்து 18 வயது உள்ளவர்களுக்கு கல்வி புகட்டுவதில் ஓரளவிற்கு நல்ல பலன் ஏற்படுகிறது என்பதால் 'ஃபங்ஷனல் லிட்டரஸி', யார் யார் எந்தெந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பார்த்து அந்தத் தொழில் அறிவைப் பெற என்னென்ன படிப்பைச் சொல்லிக்கொடுக்க முடியுமோ அதைச் சொல்லிக் கொடுப்பது பலனுள்ளதாக இருக்கும் என்ற முறையில் 240 பள்ளிகள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். முருகையன் : முதியோர் கல்விக்காக 240 பள்ளிகள் துவங்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 240 பள்ளிகள் எந்தெந்தக் கிராமங்களில் நிறுவப்பட்டிருக்கின்றன? அங்குள்ள கல்வி அறிவில்லாத முதியோர்கள் கையெழுத்து போடுவதற்காகவாவது அந்த அறிவைப் பெறுவதற்காகவாவது ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 240 பள்ளிகளில், பள்ளி ஒன்றுக்கு 30 பேர்கள் வீதம் நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம், மாலை 7—8-30 வரையில் அல்லது 9 மணி வரையில் அந்தந்த ஊர் நிலைக்கு ஏற்ப முதியோர் கல்விப் பயிற்சி அளிக்கப் பட்டுவருகிறது. நாளாவட்டத்தில் இது எல்லா மக்களுக்கும் பரவச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூடுமானவரையில் கட்டாய முறைக் கல்வியை ஆரம்பக் கட்டத்திலேயே நுழைப்பதன்மூலம் ஒருசில ஆண்டுகளில் இந்த கல்வி அறிவின்மையைப் போக்கவேண்டும் என்ற முயற்சியையும் எடுத்துவருகிறது.

திரு. நா. கிருட்டிணன் : தலைவரவர்களே, புதிதாக ஆரம்பிக்கப் பட்டிருக்கும் முதியோர் கல்விப் பள்ளியில் கோ-எடுகேஷன் முறையை அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதியோர் என்கிற நிலைமை என்று சொல்கிறபோது, கோ-எடுகேஷன் வைப்பதால் எந்த வித ஆபத்தும் ஏற்பட்டுவிடாது. இப்போது

1972 மார்ச் 11]

இருக்கும் வகுப்புகளில் கூட ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசம் பாராமல் தான் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. ந. தருமலிங்கம்: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, முதியோர் கல்வித் திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் அமல் செய்யப்பட்டு நடைமுறையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது தஞ்சாவூர், பொள்ளாச்சி, திருவண்ணாமலை, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் ஒவ்வொன்றிலும் 60 பள்ளிகள் திறந்து வைக்கப்பட்டு, இப்போது 240 பள்ளிகள் நடைமுறையில் இருந்து வருகின்றன.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இப்போது பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நிறைய பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கும் முகத்தான் ஒவ்வொரு சிற்றூர்களிலும் இந்த முதியோர் கல்வித் திட்டம் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைச் செய்ய லாம். நல்ல யோசனை தான். நிதிப்பற்றாக்குறை தான் அதைச் செய்யமுடியாததற்குக் காரணம். அதற்கு ஏராளமான நிதி வசதி வேண்டும். அந்த நிதியை வைத்துக்கொண்டு அந்த முயற்சியில் ஈடுபடலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்த முதியோர் கல்வி அளிப்பதற்காக மன்றங்கள் முன் வந்தால் அவற்றிற்கு உதவித்தொகை அளித்து அந்த வேலையைச் செய்ய அரசாங்கம் தூண்டுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த முறையில் ஆங்காங்கு மகளிர் மன்றங்கள் போன்றவையும், வேறு பல பொது மன்றங்களும் ஏற்று நடத்த முன்வருவார்களேயானால், அந்த வகையில் உதவியளிக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது மதுரை மாவட்டத்தை கூறவில்லை. மதுரை மாவட் டத்திற்கும் இந்த முதியோர் கல்வித் திட்டம் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த 'பார்மல் எடுகேஷன் அண்டு பங்ஷனல் லிட்டரசி' அந்த இடங்களில் பரிட்சார்த்தமாக இப்போது நடத்தி வருகிறோம். அது வெற்றிகாமாக நடைபெறுகிறது என்பதை அறிந்தபிறகு, பிற மாவட்டங்களுக்கும் அதை விஸ்தரிக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்கும்.

அரசியல் தியாகிகளின் குழந்தைகள்

***431. வினா—திரு. என். மருதாசலம்** : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு சைனிக் ஸ்கூலில் சேர்ந்து படிக்க உதவித் தொகை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே. இந்த சைனிக் ஸ்கூலில் தியாகிகளின் குழந்தைகளைச் சேர்த்துக்கொள்ள ஏதேனும் சலுகைகள் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த சைனிக் பள்ளியில் எந்தவிதமான சலுகையும் யாருக்கும் தருவது இல்லை. மெரிட் பேசிஸ்லில்தான் எடுக்கிறார்கள். ஜாதி, மதம், இனம் முதலிய பாகுபாடுகள் எதைப்பற்றியும் கவலைப் படாமல், மாணவர்களுக்கு இருக்கும் ஆப்டிட்யூட், நோக்கம் ஆகியவற்றை பொறுத்து, தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அவர்களுடைய குடும்பங்களின் வருமான அடிப்படையில் வருஷ வருமானத்தை கணக்கிட்டு, அதற்கேற்ற அளவுக்கு சிலபேர்களுக்கு உதவித்தொகை அளிக்க முயற்சி இருந்து வருகிறது. வேறு எந்த வகையிலும் யாருக்கும் சலுகை அளிக்கப்படவில்லை.

திரு. என். மருதாசலம் : இப்போது இருக்கும் சைனிக் ஸ்கூல் ஒரே ஒரு மாவட்டத்தில் தான் இருக்கிறது. அப்படி இல்லாது எல்லா மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?